**கவனிக்க.**-*2024.11.14 ஆந் திகதிய இல.2411 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2412 - 2024 නොවැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2024.11.22

*2412 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 2280 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2283 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 2282 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2279- B 082629 - 5,403 (2024/11)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை நில அளவைத் திணைக்களம்

விலைமனுக் கோரல்

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2025***

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2024.12.06ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப் படும் திகதி* | *வீடு தேவைப் படும் காலம்* |
|---|---|---|---|---|---|---|
| வட மாகாணம் | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் அலுவலகம், வவுனியா | முல்லைத் தீவைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.01.01 | இரண்டு ஆண்டுகளுக்கு |
| ஊவா மாகாணம் | பதுளை | வெலிமடை | மாகாண நில அளவையாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், பள்ளிய வீதி, பதுளை | வெலிமடையைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.01.01 | இரண்டு ஆண்டுகளுக்கு |
| ஊவா மாகாணம் | மொணராகலை | சியம்பலாண்டுவ நகரம் | மாகாண நில அளவையாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், பள்ளிய வீதி, பதுளை | சியம்பலாண்டுவ வைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.01.01 | இரண்டு ஆண்டுகளுக்கு |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்.-** *அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன*

வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இடவசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணபத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் “பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)” எனக் குறிப்பிட்டு 2024.12.06ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

டபிள்யூ. சுதத் எல்.சீ. பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி, கொழும்பு 05,
2024, நவெம்பர் 11.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2025**

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம் - 2025

**கட்டிட உரிமையாளருக்காக :**

01. முழுப்பெயர் :------------------------------------------------------------------------------------------.
02. முகவரி :-----------------------------------------------------------------------------------------------.
03. தொலைபேசி இலக்கம் :------------------------------------------------------------------------------.
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :---------------------------------------------------------------.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்தப் பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :-------------------------------
-----------------------------------------------------------------------------------------------------.
02. மாதாந்த வாடகைத் தொகை :--------------------------------------------.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :------------------------------------------------------------------.
04. உரிய நகரத்தில் இருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :---------------------------------------
05. இடத்தின் விஸ்தீரணம் :-----------------------------------------------------------------------------------
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கையும் தொடர்பான விபரங்கள் :-----------------------
07. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :-------------------------------------------------.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :------------------------------------------------.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி /வேலி) -------- :---------------------------------------------.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :-------------------------------------------------------.
11. தொலைபேசி தொடர்பு உள்ளதா ? :---------------------------------------------------------.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

---------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

11- 256

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்- ஏறாவூர்

## பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் டாட்டா லொறி ( சிறியது) 2024.11.30 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏலவிற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏலவிற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

நீதிவான்.

சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்,
ஏறாவூர்,
2024.11.08.

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | மோட்டார் வாகன இலக்கம் | வாகன வகை |
|---|---|---|---|
| 01 | 37816/MT/2022 | EP ML- 7307 | மோட்டார்சைக்கிள் (உதிரிப்பாகங்கள்) |
| 02 | 40787/E/2023 | BER- 8521 | மோட்டார்சைக்கிள் |
| 03 | 35861/WL/2021 | 158- 9259 (TAPAL -90) | மோட்டார்சைக்கிள் |
| 04 | AR/137/2020 | EP WN- 6901 | மோட்டார்சைக்கிள் |
| 05 | 34219/MISC/2020 | BEV- 0604 | மோட்டார்சைக்கிள் (உதிரிப்பாகங்கள்) |
| 06 | 41175/PC/2023 | EP XU- 5424 | உதிரிப்பாகங்கள் மட்டும் |
| 07 | B/641/2018 | GF- 2114 | மோட்டார்சைக்கிள் (உதிரிப்பாகங்கள்) |
| 08 | B/627/2020 | BGU- 6922 | மோட்டார்சைக்கிள் (உதிரிப்பாகங்கள்) |
| 09 | 43247/MIS/2023 | EP LF- 5753 | டாட்டா லொறி சிறியது (உதிரிப்பாகங்கள்) |
| 10 | B/998/2010 | - | மோட்டார்சைக்கிள் (உதிரிப்பாகங்கள்) |

11- 271

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**மாம் பிஸ்கட்ஸ் லங்கா ( பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. - PV 95313**

*தற்காலிக கலைப்பாளர் விடுவிப்பு அறிவித்தல்*

*கம்பனியின் பெயர் :* மாம் பிஸ்கட்ஸ் லங்கா ( பிரைவேட்) லிமிட்டட்
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.07, வரகந்த எஸ்டேட், வறகமுற, மாத்தளை
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு ( குடியியல்)
*வழக்கு இல. :* CHC/ 14/ 2024/ CO
*கம்பனி தற்காலிக கலைப்பாளர் பெயர் :* G.J. David
*முகவரி :* Former Provisional Liquidator,
C/O SJMS Associates,
Level 3, No.11, Castle Lane, Colombo 4.
(Presently C/O Deloitte Associates, Level 1.
No. 100, Colombo 02).
*தற்காலிக கலைப்பாளர் விடுவிப்புத் திகதி :* 2024.10.11

11-234

---

**கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை (8 - ஆம் பிரிவின் பிரகாரம்) 2024, ஒற்றோபர் 22 ஆந் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் முந்தைய பெயர்:* லென்டர் லங்கா ட்ரேடிங் ( பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இல.:* பீவீ 5783
*முகவரி:* இல.76B, கவ்டான,அத்திடிய வீதி, தெஹிவளை
*தபால் குறியீடு:* 10350
*கம்பனியின் புதிய பெயர்:* சாஜர்ஸ் பீசீ லங்கா ட்ரேடிங் ( பிரைவட்) லிமிட்டட்

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசஸ் ( பிரைவட்) லிமிட்டெட்.

இல. 20/ A,
வல்பொல வீதி,
அக்கோனா, அங்கொடை.

11- 235

---

**அறிவித்தல்**

சட்டத்தின் பிரிவு 59 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளுக்கும் மற்றும் நிறுவனத்தின் விதிகளுக்கமையவும், அமைய இல. 264, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14 இல் உள்ள ஆடம் கார்பன்ஸ் லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் குழு, நிறுவனத்தின் வெளியிடப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 955, 996,208.46 ( ரூபா தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்து மில்லியன் தொள்ளாயிரத்து தொண்ணூற்றாறு ஆயிரத்து இருநூற்றி எட்டு மற்றும் நாற்பத்தாறு சதங்கள் மட்டும்) 503,920,150 ( ஐநூற்று மூன்று மில்லியன் ஒன்பது இலட்சத்து இருபதாயிரத்து நூற்று ஐம்பது பங்கு மட்டும்) உள்ளடங்கலாக அதன் வெளிப்படுத்தப்பட்ட மூலதனத்தை 351, 496,208.46 (ரூபா முந்நூற்று ஐம்பத்தொரு மில்லியன் நானூற்று தொண்ணூற்று ஆறாயிரத்து இருநூற்று எட்டு ரூபா நாற்பத்தாறு சதங்கள் மட்டும்) மற்றும் பங்குகளில் மாற்றமின்றி 503, 920, 150 (ஐந்நூற்று மூன்று மில்லியன் ஒன்பது இலட்சத்து இருபதாயிரத்து நூற்று ஐம்பது பங்கு மட்டும்) கொண்ட பங்குதாரர்களின் பங்குகளின் எண்ணிக்கையை மாற்றாமல் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டு 2024, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி முதல் நிறுவனம் குறைக்கவுள்ளது.

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 59 (2) இன் படி இந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.*

*ஆடம் கார்ப்பரேட் செக்ரட்டரியல் ( பிரைவேட்) லிமிட்டெட் சபையின் உத்தரவுப்படி,*

*ஆடம் கார்பன் லிமிட்டெட்.*

*11- 266*

---

**ஒருங்கிணைப்பு அறிவிப்பு**

***சிலோன் ஹொஸ்பிட்டலின் பிளக் மற்றும் டர்டன்ஸ் ஹார்ட் சென்டர் ( பிரைவேட்) லிமிட்டெட்***

*இந்த அறிவிப்பு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 239 இன் படி ஒன்றிணைப்பதற்கான முன்மொழிவுடன் தொடர்புடையது*

*சிலோன் ஹொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி ஆனது ( பதிவு இல.* PQ *113 மற்றும் அதன் பதிவு அலுவலகம் இல. 3, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 3 இல் அமைந்துள்ளது) டர்டன்ஸ் ஹார்ட் சென்டர் ( பிரைவேட்) லிமிட்டெட் ( இதன் பதிவு இல.* PV *6302 மற்றும் இல. 3, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 03 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது) உடன் இணைந்து ஒருங்கிணைக்கப்படவுள்ளது.*

*சிலோன் ஹொஸ்பிட்டல்ஸ் பிஎல்சியை டர்டன்ஸ் ஹார்ட் சென்டர் ( பிரைவேட்) லிமிட்டெட் உடன் இணைப்பதற்கான முன்மொழிவானது 2025, சனவரி 01 ஆந் திகதி அல்லது அதற்கு பிற்பட்ட* **கம்பெனி** *பதிவாளர் ஜெனரலால் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.*

*மேற்கூறப்பட்ட இரு நிறுவனங்களின் இயக்குனர்கள் சபைகளும் இந்த முன்மொழியப்பட்ட ஒருங்கிணைப்பு இரு நிறுவனங்களுக்கும் சிறந்த நலன்களை வழங்குவதாக கருதுகின்றனர் மற்றும் இந்த ஒருங்கிணைப்பு அமுலுக்கு வந்தவுடன் தீர்வு சோதனைகளை (* Solvency Test*) சரியாக செய்ய தீர்மானித்துள்ளார்கள்.*

*நிறுவவனத்தின் எந்தவொரு பங்குதாரரும் அல்லது கடனளித்தவரும் அத்துடன் நிறுவனம் கடமைப்பட்டிருக்கும் எந்தவொரு தனி நபரும் ஒருங்கிணைப்பு முன்மொழிவின் நகலை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.எந்த வேலை நாளிலும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை கோரிக்கைகளை எழுத்துபூர்வமாக சமர்ப்பிக்கலாம். ஒருங்கிணைப்பு முன்மொழிவின் பிரதிகள் செயாலாளர் அலுவலகம்,* Nexia Corporate Consultants ( Private) Limited, *இல. 130*, Level 02, Nawala Road, Narahenpita *இல் பெற்றுக் கொள்ளலாம்.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

Nexia Corporate Consultants ( Private) Limited
Secretaries to
Ceylon Hospitals PLC and Durdans Heart Center
(Private) Limited.

*11- 267*